Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO.109/2018, Cr.No.268/2018, Tirupathur Taluk PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.5, Page.No.

| | |
|---|---|
| **பெயர்** | தினகரன் |
| **வயது** | 46 |
| **தந்தை/கணவர் பெயர்** | மணி |
| **கிராமம்** | திருப்பத்தூர் |
| **மாவட்டம்** | திருப்பத்தூர் |
| **தொழில்** | வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 09th day of October 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u> (1ம் எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை, 2ம் எதிரி ஆஜர்)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் வெள்ளி நகைக்கடையில் தொழில் செய்து வருகிறேன். 19.05.2016 அன்று 10.00 அல்லது 11.00 மணியளவில் ஆலங்காயம் பேருந்து நிறுத்தத்திடம் உள்ள டீக்கடையில் நானும் என்னுடன் சுகுமார் என்பவரும் இருந்த போது, போலீசார் வெங்கடேசன் என்பவரை பிடித்து விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது 1ம் எதிரி வெங்கடேசன் தான் திருடியதாக ஒப்புக்கொண்டபோது நாங்கள் அங்க இருந்தோம். என்னிடம் காட்டப்படும் 1-ம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **ஒப்புதல் வாக்குமூத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3- ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீண்ட நாட்கள் ஆனதால் என்னால் அவரை அடையாளம் காட்ட இயலாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**2–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் அவர்கள் எதிரி கூறியதை எழுதினார்கள் ஆனால் என்ன என்று எனக்கு தெரியாது. நான் காவல் நிலையத்தில் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் காவல் நிலையத்திற்கு அடிக்கடி சென்று வருவேன் என்றால் சரியல்ல. காவல்துறையினர் கேட்டுக் கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இரண்டாம் எதிரி மாதுவை இதற்கு முன் பார்த்ததில்லை.

**1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1–ம் எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் முடித்து வைக்கப்பட்டது.

**மறுவிசாரணை :– இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.10.09 18:27:16 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.